PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/S.THRIVENI EARTH MOVERS PVT LTD OVER AN EXTENT OF 4.40.0 HECTARE S.F. NO: 665(PART 1), LOCATED AT KAMANDODDI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 02.06.2022 AT 10.30 A.M AT M/S. KTR PALACE (KALYANA MANDAPAM), BENGALURU- CHENNAI NATIONAL HIGHWAY- 44, OPP: POWER GRID, MARUTHANDAPALLI, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT - 635 117.

Present:

1	Tmt.Bavanandhi	:	Special District Revenue Officer, SIPCOT, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri)
2	Er.R.Venkatesan,	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District
3	Thiru. V Rangasamy	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District
4	Thiru. S.P.R Venkatachalam	:	Senior General Manager Representative of M/s.Thriveni Earth Movers Pvt Ltd
5	Thiru.S.Suriyakumar	:	EIA Consultant M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd, Salem
	Public	:	63 Nos. (List enclosed as Annexure)

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Special District Revenue Officer, SIPCOT, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri),

Revenue officials, all general public and project proponent who have attended the public hearing for the proposed Rough Stone Quarry lease over an extent of 4.40Ha for the unit of M/s.Thriveni Earth Movers Pvt Ltd, S.F. No: 665(Part 1), Kamandoddi Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing to conducting of Public Hearing was published in "Dinathanthi" and "Times of India" dated 22.04.2022 and informed that the project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Special District Revenue Officer, SIPCOT, Krishnagiri has initiated the Public Hearing process. Further, the Special District Revenue Officer, SIPCOT, Krishnagiri requested the project proponent to explain about their proposed project through power point presentation about the proposed Rough Stone quarry project and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.S.Suriyakumar, EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd, Salem of the proposed Rough Stone Quarry project over an extent of 4.40 Ha for the unit of M/s.Thriveni Earth Movers Pvt Ltd has made presentation about the proposed Rough Stone Quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Jayaraj, Kamandhoddi Village:**

Thiru. Jayaraj gave his unconditional support to the proposed quarry project and appreciated the quarry management for providing local employment opportunities to the native people.

2. **Thiru. V. Chinnamarappa, Kamandhoddi Village:**

Thiru. V. Chinnamarappa has stated that the quarry management has already paved the road way to the local school students to reach their destination and facilitated water resources to the Kamandhoddi Village. Further, he said that there will be more employment opportunities will be created by the proposed quarry project to the local people. Finally, he welcomed and gave his support to the proposed quarry project.

3. **Thiru. V. Kesavan, Kamandhoddi Village:**

Thiru.V. Kesavan has told that there will be more employment opportunities to the local people will be created by the proposed quarry project of M/s.Thriveni Earth Movers Pvt Ltd. Further, he welcomed and gave his support to the proposed quarry project.

Conclusion:

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, two number of petitions were received on the proposed M/s.Thriveni Earth Movers Pvt Ltd Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation /E-mail received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public about the views/comments/complaints on the proposed Rough Stone quarry projects.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

District Environmental Engineer **Tamilnadu Pollution Control Board** **Hosur**	**Special District Revenue Officer** **SIPCOT** **Krishnagiri**	**District Collector** **Krishnagiri**

தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட், ச.எண்.665 (பகுதி 1), காமன்தொட்டி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.40.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 02.06.2022 அன்று தேசிய நெடுஞ்சாலை – 44, பவர் கிரிட் எதிரில், மருதாண்டப்பள்ளி, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். கே.டி.ஆர் பேலஸ் (கல்யாண மண்டபம்) காலை 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	திருமதி. வ. பவணந்தி	:	தனி மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி)
2	Er.இரா.வெங்கடேசன்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்.
3	திரு.வீ.ரங்கசாமி	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்.
4	திரு.S.P.R. வெங்கடாசலம்	:	முதுநிலை பொது மேலாளர் தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பிரதிநிதி
5	திரு.S. சூர்யகுமார்	:	சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம்
	பொதுமக்கள்	:	63 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரிக்கு மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட், கிருஷ்ணகிரி மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரியின் குத்தகைதாரர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆகியவற்றில் 22.04.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை எடுத்துரைத்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி குத்தகைதாரரின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் குவாரி திட்டம் பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களை கேட்கலாம் என்றும், இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிநாடா மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, தனி மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து, ரப் ஸ்டோன் குவாரி

திட்டத்தின் குத்தகைதாரரை உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல்சுரங்கம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

பின்பு தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.S. சூர்யகுமார் ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் நிழற்பட விளக்கக்காட்சி (PowerPoint Presentation) மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

பொதுமக்கள் கருத்துகேட்பு:

1. திரு. ஜெயராஜ், காமன்தொட்டி,

திரு. ஜெயராஜ் அவர்கள் உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டம் அமைவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், இத்திட்ட செயல்பாட்டினால் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

2. திரு. V. சின்னமாரப்பா, காமன்தொட்டி,

திரு. V. சின்னமாரப்பா அவர்கள் உத்தேசிக்கப்பட்ட குவாரி நிறுவனத்தினர் ஏற்கனவே காமன்தொட்டி கிராமத்தில் உள்ள பள்ளி மாணவர்கள் சென்று வர சாலை வசதி செய்து தந்துள்ளனர் மற்றும் காமன்தொட்டி கிராமத்திற்கு தண்ணீர் வசதியும் செய்து தந்துள்ளனர். மேலும், தற்பொழுது உத்தேசிக்கப்பட்ட குவாரி வருவதினால் பல நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் தெரிவித்தார். இறுதியாக, இந்த உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

3. திரு. V. கேசவன், காமன்தொட்டி,

திரு. V. கேசவன் அவர்கள் தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உத்தேசித்துள்ள குவாரி செயல்பாட்டிற்கு வந்தால் அதிகளவில் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்தார். மேலும், இத்திட்டத்தை வரவேற்று தனது ஆதரவினை தெரிவித்தார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டதுடன், இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெற்றப்பட்ட 2 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். திருவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திலோ எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் மற்றும் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெற்றப்பட்ட மனு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

03/6/2022

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர்	தனி மாவட்ட வருவாய் அலுவலர் சிப்காட் கிருஷ்ணகிரி	மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி